**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே/சூன் – 2019**

**P104 காப்பியங்களும் சங்க இலக்கியமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. தமிழைப் பற்றி வால்மீகி இராமாயணம் கூறுவது என்ன?
2. 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே மூத்தகுடி' என்றுரைத்த நூல் எது?
3. 'பாங்கொடு தழால்' என்றால் என்ன?
4. ஆறாம் பத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?
5. செலவு அழுங்குவித்தல் என்றால் என்ன?
6. வரைவு கடாவுதல் என்றால் என்ன?
7. கோட்டினத்து ஆயர் என்போர் யார்?
8. மடலேறுதல் என்றால் என்ன?
9. ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?
10. இதிகாசம் என்றால் என்ன?
11. குகன் இராமனுக்குப் படையலிட்டவை யாவை?
12. சிலப்பதிகாரம் கூறும் மூன்று உண்மைகள் யாவை?
13. பாரதியார் – சிறுகுறிப்பு தருக.
14. வாணிதாசனின் முதல் கவிதைத் குறித்து கூறுக.
15. மாங்கனி காவியம் தோன்றிய சூழல் குறித்து கூறுக.

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. முச்சங்கங்கள் இருந்தமைக்கான சான்றுகள் சிலவற்றைக் கூறுக.
2. சோழன் கிள்ளிவளவனின் மறைவுக்காக ஆடுதுறை மாசாத்துவனார் பாடிய கையறு நிலைப் பாடற் கருத்தை இயம்புக.
3. புற இலக்கியத்தில் பெருந்திணை குறித்து விவரி.
4. 'பாடுகம் வா வாழி தோழி' என்ற கலித்தொகைப் பாடலின் இறைச்சி குறித்து விளக்குக.
5. கோப்பெருந்தேவி கனவில் கண்ட காட்சிகள் யாவை?
6. விசயை தன் மகனுக்குக் கூறிய அறவுரைகளை எழுதுக.
7. வில்லிபாரதத்தில் வரும் கிளைக்கதைகளுள் ஒன்றினை விளம்புக.
8. பாஞ்சாலியின் சபதம் குறித்து விவரிக்க.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) சங்க இலக்கியத்தில் குறிஞ்சித்திணைப் பாடல்களின் சிறப்பினை விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) சங்கப் பாடல்கள் வழி அறியலாகும் தமிழரின் மேன்மை மிகு அகவாழ்வு குறித்து விவரித்துரைக்க.

2. (அ) ஆற்றுப்படை இலக்கியங்கள் குறித்து எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) மணிமேகலையில் இந்திர விழா குறித்து கூறப்பட்டுள்ள செய்திகளை விளம்பியுரைக்க.

3. (அ) கண்ணப்ப நாயனாரின் பக்தித் திறத்தை மதிப்பிட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) பாரதிதாசனின் வீரத்தாயில் வெளிப்படும் சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களை எடுத்துரைக்க.

***